2021 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2021–2022, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021–2022 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) இன்றைக்கு விவாதத்தில் பேசுகின்ற உறுப்பினர்கள் தங்கள் உரையை சுருக்கமாக, 20 நிமிடங்களில் முடித்துக்கொண்டு ஒத்துழைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்கின்ற இரு பெரும் தெய்வங்களையும் அவர்கள் உறங்கும் திசை நோக்கி பணிவோடு வணங்கி என் உரையை இந்த அவையில் நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

15–வது சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் இன்றையதினம் என்னுடைய பேச்சு இறுதிப் பேச்சாக அமையும் என்று நான் கருதுகின்றேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆல் அடையாளம் காணப்பட்டு, சாதாரண கிராமத்துச் சிறுவனாக இருந்த என்னை, அவர், ஊரறிய கட்சியின் மாவட்டச் செயலாளராக்கினார்.